# கீழக்கரை நகர்மன்ற 24.08.2021–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

## பொருள் :1

இயற்கை இடர்பாடுகள் – புரெவி புயல் காரணமாக இந்நகராட்சிப் பகுதிகளில் கடும் மழையின் காரணமாக மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தார்ச்சாலைகளை மறு சீரமைப்பு பணிகள் ரூ.2,50,000/–ல் மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர் மன்றத்தில் 12.05.2021–ந் தேதி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிகள் செய்வதற்கு 24.08.2021–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| இயற்கை இடர்பாடுகள் நிதி– புரெவி புயல் 2020 | | | | |
| 1. | புரெவி புயல் காரணமாக இந்நகராட்சிப் பகுதிகளில் கடும் மழையின் காரணமாக, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தார்ச்சாலைகளை மறு சீரமைப்பு செய்யும் பணி. | 2.50 | எம். கஜேந்திரன், 21/33, தட்டான்தோப்பு தெரு, கீழக்கரை. | ரூ.2,36,803/– மதிப்பீட்டு தொகையை விட 0.10% குறைவு |
| | | | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், 21/52, மெயின்ரோடு தட்டாந்தோப்பு, கீழக்கரை. | ரூ.2,38,582/– மதிப்பீட்டு தொகையை விட 0.65% அதிகம் |

**(கோப்பு எண். 182/2021/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எம். கஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.886 அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் :2</u>**

இந்நகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 25KVA ஜெனரேட்டர் **500** மணி நேரம் இயங்கி உள்ளதால் இராமநாதபுரம் Genearth Service நிறுவனம் மூலம் சர்வீஸ் செய்யப்பட்டது. அதற்கான கட்டணம் ரூ.**5,339/–** மட்டும் வழங்க கோரி கீழ்காணும் விவரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | சர்வீஸ் செய்வதற்கான பொருட்களுக்குரிய பட்டியல் (Invoice No. S420344062200275, Date 02.08.2021) | – | ரூ. **4,336/–** |
| 2) | வேலைக்கான கூலி (Invoice No. L420344062200141, Date 02.08.2021) | – | ரூ. **1,003/–** |
| | **மொத்தம்** | – | **ரூ. 5,339/–** |

மேற்காணும் விவரப்படியான பட்டியல் ரூ. **5,339/–** ஐ இராமநாதபுரம் Genearth Service நிறுவனத்திற்கு வழங்குவதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.256/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ.**5,339/–** மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.887 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் :3</u>**

பிரதான் மந்திரி ஜான் விகாஸ் காரியக்ரம் (PMJVK) **2020–21** திட்டத்தின் கீழ் இந்நகராட்சிப் பகுதியில் கொந்தகருணை அப்பா தர்ஹா மணல் மேடு பகுதியில் புதிதாக **5.00** லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (Over Head Tank) அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு, மண் பரிசோதனை (Soil Test), வடிவமைப்பு (Design) அறிக்கைகள் மற்றும் மேற்காணும் இடத்தில் ஏற்கெனவே அமைந்துள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் ஸ்திரத்தன்மை (stability) குறித்து ஆய்வு செய்து அறிக்கை தருமாறு காரைக்குடி, அழகப்பா செட்டியார் பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பம் **(**சிவில் இன்ஜினியரிங்**)**, முதல்வர் அவர்களிடம் **14.06.2021** மற்றும் **07.07.2021–**ந் தேதிய இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி ஆய்வறிக்கைகளுக்குரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்துமாறு முதல்வர் மற்றும் துறைத்தலைவர், அழகப்பா செட்டியார் பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பம் **(**சிவில் இன்ஜினியரிங்**)**, காரைக்குடி அவர்களின் **19.07.2021–**ந் தேதிய மின்னஞ்சல் செய்தியின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. மண் பரிசோதனை (Soil Test) - ரூ. 16,500/– +GST 18%
2. ஸ்திரத்தன்மை (stability Test) - ரூ. 25,000/– +GST 18%
3. கட்டமைப்பு வடிவமைப்பு (Structural Design) திட்ட மதிப்பீட்டில் 2.5% + GST 18%

மேற்காணும் விவரப்படியான கட்டணங்களில் தற்போது கீழ்காணும் விவரப்படியான கட்டணங்கள் மட்டும் செலுத்துவதற்கு இந்நகராட்சிப் பொறியாளரால் **02.08.2021–ந்** தேதி குறிப்பு வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. மண் பரிசோதனை (Soil Test) - ரூ. 16,500/– +GST 18% | - ரூ.19,470/– |
| 2. ஸ்திரத்தன்மை (stability Test) - ரூ. 25,000/– +GST 18% | - ரூ.29,500/– |
| | - ரூ. 48,970/– |

மேற்காணும் விவரப்படியான ஆய்வு கட்டணங்கள் ரூ. **48,970/–** மட்டும் முதல்வர் மற்றும் துறைத்தலைவர், அழகப்பா செட்டியார் பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பம் (சிவில் இன்ஜினியரிங்), காரைக்குடி அவர்களுக்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.463/2020/இ1)**

**அலுவலகக்குறிப்பு:**

1) ஆய்வு கட்டணங்களுக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) திட்ட நிதி ஒதுக்கீடு செய்து, ஆய்வு கட்டணங்களுக்குரிய செலவினத்தை ஈடு செய்து கொள்ள தெரிவிக்கும் பட்சத்தில், ஆய்வு கட்டணங்களுக்குரிய செலவினம் வருவாய் நிதியில் ஈடு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.888 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :4**

சென்னை,நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதியின்படி இந்நகராட்சி பகுதியில் சிறிய அளவிலான நுண் உரம் தயார் செய்தல் (On Site Compost), பெரிய அளவில் குப்பைகளை உருவாக்குபவர்கள் உரம் தயாரித்தல் (Bulk Waste Generation)- நுண் உரகிடஙகு உரம் தயார் செய்தல் மற்றும் மறு சுழற்ச்சி செய்தல் போன்ற பணிகளை (அவுட்சோர்ஸிங முறையில்) 12 பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ளுவதற்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை உத்திரவு ந.க.எண்49/2019/எச்1 நாள் 30.08.2019–ன் படி எவர்கீரின் என்வோரமெண்ட் சர்வீஸ் இராமநாதபுரம் நிறுவனத்திற்கு 01.09.2019 முதல் 28.02.2021 வரை பணி உத்திரவு வழஙகப்பட்டு பணிகள் நல்ல முறையில் பார்க்கப்பட்டு வருகிறது. தற்போது கீழக்கரை நகராட்சி பொதுசுகாதார பணிகளின் அவசியம் கருதி மேலும் 6 மாத காலத்திற்கு 01.03.2021 முதல் 31.08.2021 வரை பணிநீடிப்பு செய்து பணி உத்திரவு வழஙகப்பட்டுள்ளது மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பணி நீட்டிப்பு செய்து கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் பணி

நீட்டிப்பு செய்து உத்திரவு வரும் வரை பொதுசுகாதார அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(கோப்பு எண் 49/2019/எச்1)

**அலுவலக குறிப்பு:**

1. நகராட்சி நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணஙக, இந்நகராட்சியில் 12 பணியாளர்களை கொண்டு (Out Sourcing) முறையில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வழஙகலாம்.
2. எவர்கீரின் என்வோரமெண்ட் சர்வீஸ் இராமநாதபுரம் நிறுவனத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பணி நீட்டிப்பு செய்து கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வரும் வரை பொதுசுகாதார அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி பணிநீடிப்பு செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்

**தீர்மானம் எண்.889அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் :5**

அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள்.31.05.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள்.26.09.2014 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.18812/2017/மாநஅ–4, நாள். 26.02.2020 ஆகியவற்றில் தெரிவித்துள்ளவாறு, இந்நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் அம்மா உணவக சமையல் பணிக்கு தேவைப்படும் காய்கறி வகைகளை அன்றாடம் 01.03.2021 முதல் 31.08.2021 வரை ஆறு மாதங்களுக்கு வெளிச்சந்தை விலையில் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டு இவ்வலுவலக ந.க.எண். 187/2020/இ1, நாள்.25.02.2021–ன்படி விநியோக உத்தரவு வழங்கப்பட்டது. இந்த உத்தரவு காலம் 31.08.2021–ந் தேதியுடன் முடிவடைய உள்ளதால், மேற்காணும் அரசாணை மற்றும் கடிதங்களில் தெரிவித்துள்ளவாறு, 01.09.2021 முதல் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இவ்வலுவலக பணி மேற்பார்வையாளர் / பொறுப்பு அலுவலர் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

தற்போது இந்நகராட்சி அம்மா உணவகம் மூலம் வழங்கப்படும் உணவுகளுக்கு உத்தேசமாக தினசரி தலா ரூ. 1000/– முதல் ரூ. 1300/– வரை மட்டுமே உணவு கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, நிர்வாக நலன் கருதி குறைந்தளவில் உணவுகள் தயார் செய்வதற்கும், அதற்குரிய காய்கறி வகைகளை குறைந்தளவில் பொதுப்பணி மேற்பார்வையாளர் / **Nodal Officer** தினசரி நேரடியாக வாங்கி வழங்க ஆணையாளர் (பொ) அவர்களால் அறிவுறுத்தப்பட்டதன்படி, இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு 01.09.2021 முதல் வெளிச்சந்தை விலையில் தினசரி உள்ளூர் காய்கறி கடைகளில் நேரடியாக விநியோகம் செய்ய பொதுப்பணி மேற்பார்வையாளர் / பொறுப்பு அலுவலர் அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | காய்கறிகள் விவரம் | அளவு |
|---|---|---|
| 1 | வெள்ளைப் பூசணிக்காய் / முள்ளாங்கி | 1 கிலோ |
| 2 | சின்னவெங்காயம் | 1 கிலோ |
| 3 | பெரிய வெங்காயம் | 1 1/2 கிலோ |
| 4 | தக்காளி | 3 1/2 கிலோ |
| 5 | கேரட் | 1 கிலோ |
| 6 | கத்திரிக்காய் | 1 கிலோ |
| 7 | உருளை கிழங்கு | 1 கிலோ |
| 8 | பீன்ஸ் | 1 கிலோ |
| 9 | கருவேப்பிலை,மல்லி மற்றும் புதினா | 1/2 கிலோ |
| 10 | பச்சைமிளகாய் | 1/2 கிலோ |
| 11 | இஞ்சி | 0.100 கிராம் |
| | **மொத்தம்** | **12.100 கி.கி** |

**அலுவலக குறிப்பு**

1. இந்நகராட்சி அம்மா உணவகத்திற்கு 01.09.2021 முதல் தினசரி உள்ளூர் காய்கறி கடைகளில் நேரடியாக விநியோகம் செய்ய பொதுப்பணி மேற்பார்வையாளர் / பொறுப்பு அலுவலர் அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.890 அனுமதிக்கப்பட்டது.**

**ஒம்/—எம். பூபதி,**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**